DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

CC. / STC. / MC./ DVC. No : **MC. 43/2023**

Deposition of **PW - 1 Witness for Petitioner - Cross**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. சங்கீதா |
| Father's Name | : | க/பெ திரு. ராமர் |
| Village | : | புளியங்குறிச்சி |
| Taluk | : | தலைவாசல் |
| Calling | : | இல்லத்தரசி |
| Age | : | 25 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 07.08.2025. **துவக்க நேரம்** 12.53 **சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டது. சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**எதிர்மனுதாரரின் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது கணவரின் தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவரின் தாத்தா,பாட்டி, அப்பா அனைவரும் ஒரேவீட்டில்தான் இருந்துவருகிறார்கள் என்றால் சரிதான்.

2) எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதற்கு பின்னிட்டு, நான், எனது அம்மா வீட்டில் இருக்கும்போது, எனது கணவர், என்னை சமாதானப்படுத்தி அவரது வீட்டிற்கு அழைத்தார் என்றால் சரிதான். அவர் அழைத்ததற்கு பின்னிட்டு, நான் அவருடன் சென்றேனா என்றால் சென்று, அங்கு 10 நாட்கள் இருந்தேன், மீண்டும் என்னை அழைத்துகொண்டு வந்து, எனது பெற்றோர் வீட்டில் விட்டு சென்றுவிட்டார்.

3) மேற்சொன்னவாறு, நான் வழக்கிற்காக 10 நாட்கள் எனது கணவர் வீட்டிற்கு சென்றேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், என் கணவர் என்னை பலமுறை அழைத்தும் நான் அவரது வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

4) திருமணத்தின்போது, எனக்கு எத்தனை சவரன் நகை போட்டார்கள் என்றால் 3 சவரன் நகை போட்டார்கள். 3 சவரன் நகை போட்டார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், உண்மையில் 1 சவரன் நகைதான் போட்டார்கள் என்றாலும் சரியல்ல.

5) எனது கணவர் நெல்லை அறுவடை செய்யும் இயந்திர வண்டியை வைத்துள்ளார் என்று நான் எனது மனுவில் சொல்லியுள்ள பட்சத்தில், அதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) என்னுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனக்கு ஒரு தம்பி உள்ளார். எனது பெற்றோருக்கு சொந்தமாக எத்தனை ஏக்கர் காடு உள்ளது என்றால் 2 ஏக்கர் காடு உள்ளது.

7) என்னுடைய மனுவில் எனது கணவருக்கு சொந்தமாக காடு உள்ளது என்று நான் சொல்லியுள்ள பட்சத்தில், உண்மையில் அவருடைய பெயரில் காடு ஏதேனும் உள்ளதா என்றால் தெரியவில்லை. எனது பெற்றோரின் வீட்டில் நான் வசதியாக உள்ளேன் என்றாலும், எனது கணவர் வீட்டில் அவ்வளவு வசதி இல்லை என்றாலும், எனது கணவரை எங்கள் வீட்டில் வந்து வீட்டோட மாப்பிள்ளையாக இருக்கச்சொல்லி கேட்டதனால்தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றாலும், எதிர்மனுதாரர் தனது அப்பா, தாத்தா மற்றும் பாட்டி ஆகியோர்களை விட்டு வரமாட்டேன் என்று சொன்னதால்தான் பிரச்சனை

வந்தது என்றாலும் சரியல்ல.

8) நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றாலும், வழக்கிற்காக போடப்பட்டது என்றாலும், உண்மையில் எதிர்மனுதாரரின் பெயரில் எந்தவிதமான நிலமோ, காடோ சொத்தோ இல்லை என்றாலும், எதிர்மனுதாரர் கூலிவேலைக்குதான் செல்கிறார் என்றாலும், நானேதான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்றுவிட்டேன் என்றாலும், அதனால் எனக்கு ஜீவனாம்சம் கேட்க உரிமையில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை .**

முடிவு நேரம் 01.06.

Taken Down by me in Open Court Read over to the deponent in the presence of the accused and admitted by the deponent to be correct

Sd/-A.Anis Fathima,
Judicial Magistrate No.1,
Attur.